செ.வெ.எண். 924 நாள் 19.10.2010

# சிறப்பு கைத்தறிக் கண்காட்சி

## பத்திரிக்கை குறிப்பு

தமிழ் நாட்டிலுள்ள பிரதம கைத்தறி சங்கங்களின் தாய்ச் சங்கமாக திகழும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தொடர்ந்து 75 ஆண்டுகளாக சிறப்பான முறையில் பணியாற்றி ஏழை எளிய பாமர மக்கள் கூட கைத்தறி என்றாலே கோ–ஆப்டெக்ஸ் என்ற நிலையினை உருவாக்கி பவள விழா ஆண்டினை அடைந்து சாதனை படைத்துள்ளது.

இத்தகைய பெருமைக்குரிய கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம், மத்திய அரசின் ஜவுளித் துறையின் கீழ் இயங்கும் கைத்தறி அபிவிருத்தி ஆணையரகத்துடன் இணைந்து, தமிழகத்தின் மிக முக்கிய பண்டிகையான தீபாவளியை முன்னிட்டு, சென்னை மாநகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள "வள்ளுவர் கோட்டம்" வளாகத்தில் "சிறப்பு கைத்தறிக் கண்காட்சியினை" ஏற்பாடு செய்துள்ளது.

தமிழகத்தில் இயங்கிவரும் முன்னனி பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கோ–ஆப்டெக்ஸ், காதி கிராப்ட், பூம்புகார் மற்றும் கைத்தறிக் குழுமங்கள் இந்த சிறப்புக் கைத்தறிக் கண்காட்சியில் பங்கேற்று, அந்நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் இரகங்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ள 75 அரங்குகள் மூலம் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு கைத்தறிக் கண்காட்சியில், காஞ்சிபுரம், திருபுவனம், மற்றும் ஆரணி பகுதிகளில் பிரத்தியேக வடிவமைப்புகளில் எழில்மிகு வண்ணக்கலவையில் உற்பத்தியாகும் பட்டுச் சேலைகள், அனைவரும் வாங்கும் விலையில் டெக்ஸ்டரைஸ்டு ஜரிகை கொண்டு உற்பத்தியாகும் பட்டுச் சேலை இரகங்கள், சிறுமுகை, சேலம் மற்றும் பரமக்குடி கைத்தறிப் பகுதிகளில் உற்பத்தியாகும் நேர்த்திமிகு கைத்தறி சேலை இரகங்கள், வாடிக்கையாளர்கள் மத்தியில் மிகவும் பிரசித்திப் பெற்றுள்ள கோவைப்

பகுதியில் உற்பத்தியாகும் கோரா பட்டு சேலைகள், நெகமம் காட்டன் சேலைகள், பட்டு மற்றும் காட்டன் இரக வேட்டிகள், லுங்கிகள், அங்கவஸ்திரம், துண்டுகள், போர்வைகள், தலையணை உறைகள், திரைச்சீலைகள், தரை விரிப்புகள் மற்றும் கால் மிதியடிகள் ஆகிய அனைத்து ஜவுளி இரகங்களும் இந்தக் கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு கைத்தறிக் கண்காட்சி 19.10.2010 முதல் 02.11.2010 வரை காலை 10.00 மணி முதல் இரவு 9.00 வரை நடைபெற உள்ளது. இந்தக் கண்காட்சி அனைத்து விடுமுறை நாட்களிலும் திறந்திருக்கும்.

சென்னை நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள வள்ளுவர் கோட்டம் வளாகத்தில் வாகனங்கள் நிறுத்துவதற்கு தேவையான இடவசதியுடன் நுழைவுக் கட்டணம் ஏதுமின்றி இந்த சிறப்புக் கைத்தறிக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தீபாவளி பண்டிகைக்கு இன்னும் ஒருசில வாரங்களே உள்ள நிலையில், சென்னைவாழ் மக்களுக்குத் தேவைப்படும் நவீன வடிவமைப்புகளுடன் கூடிய கண்கவர் வண்ணங்களில் அனைத்து ஜவுளி இரகங்களையும் குறைந்த விலையில் ஒரே கூரையின்கீழ் வாங்குவதற்கு வசதியாக இந்த சிறப்பு கைத்தறிக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வள்ளுவர் கோட்டம் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த சிறப்பு கைத்தறிக் கண்காட்சியினை 19.10.2010 அன்று காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு **கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்** அவர்கள் தலைமையில், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் **கவிஞர் கனிமொழி** அவர்கள் துவக்கி வைத்தார்கள். இந்த விழாவில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலாளர் **திரு ஆர். இராஜகோபால்**, இ.ஆ.ப. அவர்களும் கைத்தறி மற்றும் துணி நூல் துறை இயக்குநர் திரு வெ. சந்திரசேகரன், இ.ஆ.ப. அவர்களும் கலந்து கொண்டார்கள். **முனைவர் சாந்தினி கபூர்**, இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர்/ தனி அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கோ–ஆப்டெக்ஸ் அவர்கள் விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்புற செய்தார்கள்.

2/2

கோ–ஆப்டெக்ஸ்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9